08

இலங்கை பல்கலைக்கழகப் பட்டதாரிகளிடையே தொழில்முனைவு மனப்பான்மையை வளர்ப்பதில் பல்கலைக்கழகக் கல்வித்திட்டங்களின் பங்கு

The Role of University Education Programs in Developing Entrepreneurial Mindset among Sri Lankan University Graduates)

Miss. Rusdha Nisthar

Faculty of Education, University of Colombo

அறிமுகம்

இலங்கையின் சமகாலப் பொருளாதாரமானது உயர் வேலையின்மை விகிதம் மற்றும் குறைந்தளவான பொருளாதாரப் பல்வகைப்படுத்தல் போன்ற முக்கிய சவால்களை எதிர்கொள்கின்றது. அதிலும் குறிப்பாக கல்வி கற்றோர் (பட்டதாரிகள்) வேலை வாய்ப்பின்மையானது அதிகரித்துச் செல்லும் போக்கை காணக்கூடியதாக உள்ளது. இலங்கை பல்கலைக்கழகப் பட்டதாரிகள் கூடுதலாக அரசாங்க தொழில்களிலேயே ஈடுபாடு கொண்டோராக இருப்பதுடன் சுயமாக தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதில் குறைந்தளவு நாட்டம் கொண்டோராக உள்ளனர். இலங்கை பட்டதாரிகள் மத்தியில் காணப்படும் பாதுகாப்பான அரசாங்க வேலை மீதான விருப்பமே அவர்களின் சுயதொழிலை தொடங்குவதற்கான நோக்கத்தை குறைக்கின்றது (றுநநசயளiபொந ரூ ளுநயெஎசையவாநெஇ 2021). சமீபத்திய தொழிலாளர்படை ஆய்வுகளின்படி, பு.ஊ.நு. (A/L) மற்றும்

அதற்கு மேற்பட்ட கல்வி மட்டங்களில் காணப்படும் வேலையின்மை வீதம் நாட்டிலேயே அதிகபட்சமாக (8.3மூ) உள்ளது. இதே வேளையில், பெண் பட்டதாரிகளுக்கு மத்தியில் இந்த வீதம் 11.0மூ ஆக உள்ளது. இது, நாட்டின் மனித மூலதனத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியாததன் விளைவாக ஏற்படும் பொருளாதாரச் சுமையைக் காட்டுகிறது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பட்டதாரிகளைப் பாரம்பரியமான அரச அல்லது தனியார் துறை வேலைகளுக்குத் தயார்படுத்துவதை விட, வேலைவாய்ப்பை உருவாக்கும் தொழில்முனைவோராக மாற்றுவது கட்டாயமாகிறது.

Shane and Venkataraman (2000) ஆகியோர் வாய்ப்புகளைக் கண்டறிவது மற்றும் பயன்படுத்துவது தொடர்பான ஒரு செயல்முறையான தொழில்முனைவானது, பொருளாதாரச் செயல்பாடுகளின் அடிப்படைக் கட்டமைப்பாகச் செயல்படுகிறது என்கின்றனர். வேலைவாய்ப்பை உருவாக்க அரசாங்கங்கள் சிரமப்படும் முக்கியமான காலங்களில், சுயதொழில் தொடங்குவதற்கான வாய்ப்பை இளைஞர்களுக்கு வழங்குவதன் மூலம், தொழில்முனைவு அவர்களுக்குத் தன்னிறைவுக்கான ஒரு முக்கியப் பாதையாக அமைகிறது (Kuckertz and Wagnerஇ 2010). இச்சூழலில் பல்கலைக்கழகக் கல்வித் திட்டங்களின் பங்கானது பட்டதாரிகளை பாரம்பரியமாக வேலை தேடுபவர்களாக உருவாக்குவதிலிருந்து விலக்கி, வேலையை உருவாக்குபவர்களாக மாற்றுவதை நோக்காகக் கொண்டதாக இருக்க வேண்டும். இலங்கையின் பொருளாதாரம் குறிப்பாக தற்போதைய நெருக்கடியான சூழலில் பட்டதாரிகளின் ஆக்கபூர்வமான மற்றும் புதுமையான சிந்தனை கொண்ட புதிய வணிக முயற்சிகளை வெகுவாக நம்பியுள்ளது. எனவே பல்கலைக்கழகக் கல்வித் திட்டங்கள் இளம் பட்டதாரிகள் மத்தியில் தன்னம்பிக்கை, சவால்களுக்கு முகம் கொடுக்கும் திறன், புதுமையான சிந்தனை ஆகியவற்றை

உள்ளடக்கிய தொழில் முனைவோர் மனப்பான்மையை வளர்ப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன.

பல்கலைக்கழக மாணவர்களிடையே தொழில்முனைவு மனப்பாங்கை ஏற்படுத்துவதன் அவசியம்

தொழில்முனைவானது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் ஒட்டுமொத்த சமூக நலனுக்கும் இன்றியமையாதது (Kuratko et al. இ 2003). இது புத்தாக்கத்தை ஊக்குவிக்கிறது, புதிய வேலைகளை உருவாக்குகிறது மற்றும் பொருளாதாரத்தைப் பன்முகப்படுத்துகிறது. குறிப்பாக ஒரு வளரும் பொருளாதாரமான இலங்கைக்கு, புத்தாக்கத்தை நிலைநிறுத்தவும், உலகளாவிய சந்தையில் போட்டியிடவும் வலுவான தொழில்முனைவோர் தளம் தேவைப்படுகிறது. பல்கலைக்கழகங்கள் தமது நலன் அமைப்புகள் மற்றும் கல்வித் திட்டங்களின் மூலம் சுற்றுச்சூழல் உணர்வுள்ள தொழில்முனைவை ஊக்குவிப்பதன் மூலம் நிலைத்தன்மை இலக்குகளுக்கு நேரடியாகப் பங்களிக்க முடியும் (Hayasudharana and Pereraஇ 2024). சமீபத்திய ஆய்வுகள், பல்கலைக்கழகங்கள் நீடித்த தொழில்முனைவோர் உள்நோக்கங்களை (Sustainable Entrepreneurial Intentions) வளர்ப்பதில் மாற்றத்திற்கான முகவர்களாகச் செயல்பட முடியும் என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. இலங்கையில் பசுமை தொழில்முனைவு (புசநநn நுவெசநிசநநெரசளாip) பற்றிய ஆய்வுகள் குறைவாக இருந்தாலும் பல்கலைக்கழகங்கள் தமது ஆதரவு அமைப்புகள் மற்றும் கல்வித் திட்டங்களின் மூலம் சுற்றுச்சூழல் உணர்வுள்ள தொழில்முனைவை ஊக்குவிப்பதன் மூலம் நிலைத்தன்மை இலக்குகளுக்கு நேரடியாகப் பங்களிக்க முடியும்.

இலங்கையின் பல்கலைக்கழக பட்டதாரிகளின் வேலையின்மைச் சிக்கலானது, பொதுவான தேசிய வேலையின்மை விகிதத்தை விட அதிகமாக உள்ளது. 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், புஊநு

A/L மற்றும் அதற்கு மேல் கல்வி கற்றவர்கள் மத்தியில் வேலையின்மை வீதம் 8.3மூ ஆக உயர்ந்துள்ளது (Sri Lanka Department of Census and Statistics' ஞரயசவநசடல டுயடிழரச குழசஉந ளுவயவளைவiஉளஇ 2024). இந்தப் புள்ளிவிபரங்கள் உயர்கல்வி நிறுவனங்களின் விளைவுத்திறனில் (Efficiency of Outcome) உள்ள பாரிய குறைபாட்டைக் குறிக்கின்றன. வேலைவாய்ப்பு விகிதங்களை ஆய்வு செய்யும் போது பல்கலைக்கழகங்களுக்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படுகின்றன. தொழில்நுட்ப மற்றும் தொழில்முறை சார்ந்த கல்வியை வழங்கும் திறந்தவெளிப் பல்கலைக்கழகம் (93.8மூ வேலைவாய்ப்பு) மற்றும் மொரட்டுவப் பல்கலைக்கழகம் (85.5மூ) போன்றவற்றில் உயர் வேலைவாய்ப்பு விகிதங்களுமஃ யாழ்ப்பாணம் (53.5மூ) மற்றும் கிழக்கு (52.8மூ) போன்ற பாரம்பரியமான கலை மற்றும் விஞ்ஞானப் பட்டங்களை மையமாகக் கொண்ட பல்கலைக்கழகங்களில் குறைந்த வேலைவாய்ப்பு விகிதங்களும் பதிவாகியுள்ளன.

இந்த வேறுபாடுகள் ஒரு முக்கியமான கருத்தைப் புலப்படுத்துகின்றன. அதாவது, தொழில்துறைக்கு நேரடியாகப் பொருந்தக்கூடிய அல்லது தொழில்முனைவோர் திறன்களை வழங்கும் பாடத்திட்டங்கள் சந்தைத் தேவையைப் பூர்த்தி செய்வதில் சிறப்பாகச் செயற்படுகின்றன. எனவே, குறைந்த வேலைவாய்ப்பு விகிதங்களைக் கொண்ட நிறுவனங்களில் தொழில்முனைவோர் கல்வியைக் கட்டாயமாக்குவது, பட்டதாரிகளின் தொழில் தகுதியை உயர்த்துவதுடன், பிராந்தியப் பொருளாதாரத்தில் வேலைவாய்ப்பை சமநிலைப்படுத்துவதற்கான கொள்கை ரீதியிலான மூலோபாயத் தலையீடாகவும் அமைகிறது. பட்டதாரிகள் வேலையின்மைச் சவாலை எதிர்கொள்ளும் போது, சந்தைத் தேவைகளுடன் பொருந்தக்கூடிய திறன்களை வழங்குவது உயர்கல்வி நிறுவனங்களுக்கு முக்கியம் என்பதுடன் தொழில்முனைவோர் திறன்

ஒரு முக்கியப் பொருத்தமாக அமைகிறது (ILOஇ 2001). பாரம்பரியத் துறைகளில் காணப்படும் கட்டமைப்பு சார்ந்த வேலையின்மையை எதிர்கொள்ள, தொழில்முனைவோர் மனப்பான்மையை வளர்க்கும் கல்வி ஒரு தவிர்க்க முடியாத மாற்றுவழியாகும்.

தொழில்முனைவோர் கல்வி வெறும் வணிக அறிவைப் புகட்டுவதுடன் நின்றுவிடாமல், தனிப்பட்ட உளவியல் தயார்நிலையையும் மேம்படுத்த வேண்டும். தொழில்முனைவோர் சுய-திறன் (நுவெசநிசநநெரசயைட ளுநடக-நுககiஉயஉல - ESE) என்பது தொழில்முனைவோர் மனப்பான்மையை வளர்ப்பதில் மத்தியஸ்தம் செய்யும் ஒரு முக்கிய உளவியல் காரணியாகும். சுய-திறன் என்பது ஒரு நபர் ஒரு குறிப்பிட்ட பணியைச் செய்ய முடியும் என்று நம்புவதாகும்; தொழில்முனைவோர் சூழலில், இது வெற்றி மற்றும் தோல்வியின் அச்சத்தை நிர்வகிப்பதில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது (Bandura1997). மேலும், வணிகத் தோல்விகளைத் தடுப்பதில் கல்வித் திட்டங்கள் முக்கியப் பங்கு வகிக்க முடியும். ஆய்வுகள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் நிதி நிறுவனங்கள், வணிகத் தோல்விகளைத் தடுக்க, தொழில்முனைவோரின் தேவைகளுடன் நெருக்கமாகச் சீரமைக்கப்பட வேண்டும் என்று ஆலோசனை வழங்குகின்றன. அவ்வாறே, இழப்பு குறித்த பயத்தை (Fear of Loss) நிவர்த்தி செய்வதும், உந்துதல் பெற்ற மற்றும் நேர்மறையான அணுகுமுறையைப் பேணுவதும் கட்டாயமாகும். எனவே, பல்கலைக்கழக பாடத்திட்டங்கள், மாணவர்களை வர்த்தகத் தோல்விக்கான உளவியல் அபாயங்களை எதிர்கொள்ளவும், மீள்வுத்திறனை (Resilience) வளர்க்கவும் கூடிய வகையில் வடிவமைக்கப்பட வேண்டும்.

தொழில்முனைவு மனப்பான்மையை வளர்ப்பதற்கான பல்கலைக்கழகக் கல்வித்திட்டங்களின் செல்வாக்கு நிலை

இலங்கையின் சூழலில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தொழில்முனைவோர் கல்வி (Entrepreneurship Education - EE) திட்டமிடப்பட்ட நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை உறுதிப்படுத்துகின்றன. இந்தத் திட்டங்கள் மாணவர்களின் சுய-மதிப்பீட்டுத் தொழில்முனைவோர் திறன்கள், இயல்புகள் மற்றும் மிக முக்கியமாக, தொழில்முனைவோர் உள்நோக்கங்கள் ஆகியவற்றின் மீது குறிப்பிடத்தக்க மற்றும் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன (Rathnayakeஇ 2016). இந்த முடிவுகள், தொழில்முனைவோர் கல்வியை உயர்கல்விச் சூழலில் வலுவாக உட்புகுத்துவதற்கான கொள்கை முடிவை ஆதரிக்கும் உறுதியான ஆதாரங்களாக அமைகின்றன. தொழில்முனைவோர் கல்வியானது, வெறும் கருத்தியல் அறிவூட்டலைத் தாண்டி மாணவர்களின் தனிப்பட்ட ஆற்றலை மாற்றியமைத்து அவர்களை ஒரு சாத்தியமான தொழில் விருப்பமாகச் சுயதொழிலைத் தேர்ந்தெடுக்கத் தூண்டுகிறது. தொழில்முனைவோர் கல்வி என்பது வெறும் அறிவுப் பரிமாற்றம் அல்ல் இது மாணவர்களின் மனப்பான்மை (Attitude), திறன்கள் (Skills) மற்றும் நடத்தை (டீநாயஎழைச) ஆகியவற்றை மாற்றியமைப்பதற்கான ஒரு நோக்கமுள்ள செயல்முறையாகும் (Fayolleஇ 2013).

தொழில்முனைவோர் மனப்பான்மையை வெற்றிகரமாக வளர்க்க, பாடத்திட்டங்கள், வாய்ப்புக்களை அடையாளம் காணல், புத்தாக்கம் மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் போன்ற செயலிலுள்ள, நடைமுறைத் திறன்களில் கவனம் செலுத்த வேண்டும். இந்தத் திறன்களின் பயிற்சி, மாணவர்களுக்குச் சந்தைப் பிரச்சினைகளை வணிக வாய்ப்புகளாக மாற்றும் ஆற்றலை வழங்குகிறது. கோட்பாடுகளுக்கு அப்பால், பாடத்திட்டங்கள் மாணவர்களின் மனப்பான்மை இயல்புகளை மேம்படுத்தும் வகையில் கட்டமைக்கப்பட வேண்டும். உதாரணமாக, சுயாட்சி (Autonomy) மற்றும்

சவால்களை எதிர்கொள்ளும் திறன் போன்ற இயல்புகளை ஊக்குவிப்பது, மாணவர்களின் தொழில்முனைவோர் சுய-திறனை வலுப்படுத்தவும், அவர்களின் தொழில்முனைவோர் ஆர்வத்தை அதிகரிக்கவும் உதவும். இந்த இயல்புகளை வளர்ப்பது என்பது கோட்பாட்டுப் பரீட்சைகள் மூலம் அல்ல, மாறாக, நிஜ வாழ்க்கைச் சவால்கள் மற்றும் செயற்திட்ட அடிப்படையிலான கற்றல் அனுபவங்கள் மூலமே சாத்தியமாகும்.

தொழில்முனைவோர் கல்வி, அறிவை வழங்குவதிலிருந்து நடைமுறை ஈடுபாட்டிற்கு மாற வேண்டியது அவசியம். இந்த மாற்றம், கல்வித் திட்டங்கள் வெறும் அறிவுசார் உள்ளடக்கத்தை மட்டும் வழங்காமல், வர்த்தக மாதிரியாக்கங்கள் (Business Simulations), வழிகாட்டல் திட்டங்கள் (Mentorship Programs) மற்றும் நிஜ வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்க்கும் திட்டங்களை அறிமுகப்படுத்துவதைக் கட்டாயமாக்க வேண்டும். இந்தச் செயல்முறை, மாணவர்களின் உளவியல் தயார்நிலையை அதிகரிக்கவும், வணிகத் தோல்வி குறித்த இழப்புப் பயத்தை நிவர்த்தி செய்யவும் (Addressing Fear of Loss) உதவுகிறது, இது தொழில்முனைவோர் இயல்புகளை வலுப்படுத்துவதில் மிக முக்கிய பங்காற்றும்.

வளர்ந்துவரும் பொருளாதாரங்களில், குறிப்பாக இலங்கையில், நிறுவனரீதியான தடைகளை நிவர்த்தி செய்வதன் மூலம் பல்கலைக்கழகங்கள் பொருளாதார மாற்றத்திற்கான முகவர்களாகச் செயற்பட வேண்டும். நிறுவனங்கள் ஒரு விரிவான தொழில்முனைவோர் சூழலியல் கட்டமைப்பை (Comprehensive Entrepreneurial Ecosystems) உருவாக்க வேண்டும், இது மாணவர்களுக்குத் தேவையான கல்விசார், சமூக மற்றும் நாட்டிற்குரிய ஆதரவு அமைப்புகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இத்தகைய ஆதரவு அமைப்புகள், மாணவர்களின் தொழில்முனைவோர் சுய-

திறனை கணிசமாகப் பாதித்து, அவர்களிடம் பசுமை தொழில்முனைவு பற்றிய ஊக்கலை ஏற்படுத்துகின்றன. பசுமை தொழில்முனைவு பற்றிய கவனம், உலகளாவிய மற்றும் தேசிய நிலைத்தன்மை இலக்குகளுக்கு அவசியம். இலங்கையின் பல்கலைக்கழகங்கள் தமது பாடத்திட்டங்களில் நிலைத்தன்மை சார்ந்த புத்தாக்கங்களை இணைப்பதன் மூலம், சுற்றுச்சூழல் உணர்வுள்ள தொழில்முனைவை ஊக்குவிக்க முடியும். பல்கலைக்கழக மேலாண்மைகள், கட்டமைக்கப்பட்ட கற்றல் அனுபவங்கள் மற்றும் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட ஆதரவு அமைப்புகள் மூலம், பசுமை தொழில்முனைவை வளர்ப்பதற்கான செயல் உத்திகளைப் பெறுகின்றன.

கல்வித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலுள்ள சிக்கல் நிலை, இடர்பாடுகள்

தொழில்முனைவோர் கல்வியை உயர்கல்வியில் புகுத்துவதற்கான யோசனை உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், நடைமுறைச் சிக்கல்கள் குறிப்பிடத்தக்க சவால்களை முன்வைக்கின்றன. வளப் பற்றாக்குறை, கல்வி உட்கட்டமைப்பின் தடைகள், மதிப்பீட்டுச் சிக்கல்கள் மற்றும் வரையறைத் தெளிவின்மை ஆகியவை இதில் அடங்கும். இலங்கையைப் பொறுத்தவரை, ஒரு குறிப்பிடத்தக்க கலாசாரத் தடையாக, விரிவுரையாளர்கள் மத்தியில் காணப்படும் "வணிகமயமாக்கல் குறித்த பயம்" (Fear of Commercialisation) உள்ளது. பொதுச் சேவை மற்றும் அரச துறையை மையமாகக் கொண்ட உயர்கல்விச் சூழலில், சந்தை சார்ந்த அல்லது இலாபம் நோக்கிய நடவடிக்கைகளை ஊக்குவிப்பது குறித்த கலாசாரத் தடையானது, தொழில்முனைவோர் பாடத்திட்டத்தின் நடைமுறைப் பயன்பாட்டைத் தடுக்கிறது.

இலங்கையின் இலவசக் கல்வி மற்றும் அரச பல்கலைக்கழக கட்டமைப்பிலுள்ள பிரத்தியேகமான கட்டமைப்புச் சிக்கல்கள், தொழில்முனைவோர் மனப்பான்மையை வளர்ப்பதில் பாரிய தடைகளை ஏற்படுத்துகின்றன. அதாவது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் (UGC) இறுக்கமான பல்கலைக்கழக நுழைவு நடைமுறைகள் காரணமாக, மாணவர்கள் தமது உள்ளார்ந்த விருப்பம் அல்லது தொழில்துறை தேவைக்கேற்ப பாடத்திட்டங்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்புகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. அத்துடன் பெரும்பாலான பட்டப்படிப்புத் திட்டங்களில், விருப்பப் பாடங்கள் கூட மையப் பாடங்களுடனே வரையறுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, விஞ்ஞானப் பட்டப்படிப்புகளில் உற்பத்தி வடிவமைப்பு (Product Design) அல்லது புத்தாக்கம் போன்ற கூறுகள் இன்மையானது, தொழில்முனைவோர் திறன்களை வளர்க்கும் வாய்ப்புகளைத் தடுக்கிறது. Billett (2007) என்பவர் தொழில்முனைவோர் கல்வித் திட்டங்கள் வெறுமனே கருத்தியல் அறிவை மட்டும் போதிக்காமல், தொழில்முனைவோர் எண்ணப்போக்கு மற்றும் திறன்களை வலுப்படுத்த செயன்முறை கற்றல் முறைகள் (Action-Based Learning) மற்றும் பல்வேறுபட்ட கற்பித்தல் நுட்பங்களை பயன்படுத்த வேண்டும்;; பாரம்பரிய விரிவுரை முறைகள் இதற்குப் போதுமானதல்ல என்கிறார். இந்த இறுக்கமான அனுமதி நடைமுறைகள் மற்றும் பாடத்திட்டத் தெரிவில் உள்ள நெகிழ்வுத்தன்மை இன்மை ஆகியவை இணைந்து ஒரு உள்ளீட்டு முரண்பாட்டை (ஐnpரவ னுளைஉசநியnஉல) உருவாக்குகின்றன. பல்கலைக்கழகங்கள், சந்தைத் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டியவர்களுக்குப் பதிலாக, தரவரிசையில் முதன்மையாக உள்ள மாணவர்களை மட்டுமே சேர்க்கின்றன. மாணவர்கள் விருப்பப்படி பாடங்களை மாற்றுவதற்கான நெகிழ்வுத்தன்மை இல்லாத நிலையில், பாடத்திட்டம் எவ்வளவு சிறப்பாக வடிவமைக்கப்பட்டாலும்,

அவர்களின் உள்ளார்ந்த தொழில்முனைவோர் விருப்பத்தைத் (Entrepreneurial Intention) தூண்டுவது மிகவும் கடினமாகிறது. எனவே, கல்வித் திட்டத் தெரிவுகளில் நெகிழ்வுத்தன்மையைக் கொண்டுவருவது UGC மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மூலோபாயத் தலையீடாகும்.

இலங்கையில் தொழில்முனைவோர் கல்வியை மேம்படுத்துவதற்கு அரசாங்க மட்டத்தில் மத்தியப்படுத்தப்பட்ட அல்லது நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சி இல்லை. பல்வேறு அமைச்சுகளுக்கு இடையில் ஒருமித்த கொள்கைகள் இல்லாததால், ஒட்டுமொத்தப் பாடத்திட்டத்தின் நோக்கம் மிகவும் பரந்ததாகவும், உறுதியான செயல் திட்டம் இல்லாததாகவும் காணப்படுகிறது. மேலும், தேசிய ரீதியில் பாடத்திட்ட சீரற்ற தன்மை காணப்படுகிறது. தொழில்முனைவோர் கல்வி 10 மற்றும் 11 ஆம் வகுப்புகளில் அறிமுகப்படுத்தப்பட்டாலும், அது A/L மட்டத்தில் இல்லை, பல்கலைக்கழகத்தில் கட்டாயமில்லாமல் வழங்கப்படுகிறது. இது, தொழில்முனைவோர் மனப்பான்மையைத் தொடர்ச்சியாக வளர்ப்பதற்கான ஒரு தேசியப் பாடத்திட்டக் கொள்கையின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

விரிவுரையாளர்களின் தொழில்முனைவோர் திறன் பற்றாக்குறை ஒரு முக்கியமான சவாலாகும். கற்பித்தல் சூழலைத் தூண்டுவதிலும் அறிவைப் பரப்புவதிலும் விரிவுரையாளர்கள் முக்கியப் பங்காற்றுவதால், அவர்களின் சந்தை சார்ந்த நடைமுறை அறிவு இல்லாதது பாடத்திட்டத்தின் செயல்திறனைக் குறைக்கிறது. தொழில்முனைவோர் கல்வியை வெற்றிகரமாக வழங்குவதற்கு, பேராசிரியர்கள் வெறுமனே கல்வியாளர்களாக மட்டும் இல்லாமல், தொழில்முனைவோர் அனுபவத்தைக் கொண்ட அல்லது நடைமுறை உலகத்துடன் வலுவான தொடர்புகளைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் (Rasmussen and Borchஇ 2010). இந்தத் தகுதிப் பற்றாக்குறை ஒரு

முக்கிய சவாலாகும். மேலும், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்துறைக்கு இடையே உள்ள பலவீனமான இணைப்பு பாடத்திட்ட உள்ளடக்கத்தை உண்மையான சந்தை இயக்கவியலுடன் பொருத்தமில்லாததாக ஆக்குகிறது. இந்த இடைவெளி பட்டதாரிகளின் சந்தைப்படுத்தக்கூடிய திறன்களையும் குறைக்கிறது.

புதிய தொழில்முனைவுக் கல்வித்திட்டங்களை பல்கலைக்கழகங்களில் நடைமுறைப்படுத்துவதற்கான உத்திகள்

இலங்கையின் சவால்களின் பன்முகத்தன்மையைக் கருத்தில் கொண்டு, தொழில்முனைவோர் மனப்பான்மையை வளர்க்க ஒற்றைப் பாடத்திட்டத் தீர்வு போதுமானதல்ல. மாறாக, கொள்கை ரீதியான கட்டாயமாக்குதல், நிறுவனரீதியான மாற்றம் மற்றும் மனித மூலதன முதலீடு ஆகியவற்றை ஒரே நேரத்தில் இலக்காகக் கொள்ளும் ஒரு பல்முனை உத்தி (ஆரடவi-Pசழபெநன ளுவசயவநபல) தேவைப்படுகிறது. கொள்கை வகுப்பாளர்கள் ஒரு அரசாங்கத்தால் இயக்கப்படும் கொள்கையை உருவாக்கி, அனைத்து இளங்கலைப் பட்டதாரிகளுக்கும் (வணிகம் மற்றும் வணிகம் அல்லாத மாணவர்களுக்கும்) தொழில்முனைவோர் கல்வித் தொகுதிகளைக் கட்டாயமாக்க வேண்டும். தொழில்முனைவோர் கல்வி என்பது ஒரு தனியான துறை அல்ல் அது பல்கலைக்கழகத்தின் அனைத்துத் துறைகளிலும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்;;;;; இது ஒரு பரந்த அளவிலான மாணவர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதுடன் புதுமையான சிந்தனையையும் வளர்க்கிறது (Neck and Greeneஇ 2011). இது, அனைத்துப் பட்டதாரிகளுக்கும் ஒரு அடிப்படைத் திறன் தொகுப்பை (டீயளiஉ ளமடைட ளநவ) உறுதி செய்யும். அத்துடன் அனைத்துப் பல்கலைக்கழக தொழில்முனைவோர் கல்வி முயற்சிகளையும் ஒருங்கிணைத்து, வளங்களை விநியோகிக்கவும், கொள்கைகளைச்

சீரமைக்கவும், ஒரு "தொழில் முனைவு மற்றும் தொழில் முனைவோர் கல்விக்கான மத்திய நிலையத்தை" நிறுவுவது இன்றியமையாதது.

பல்கலைக்கழகங்கள் வெறுமனே வகுப்பறைகளை விட, விரிவான தொழில்முனைவோர் சூழலியல் அமைப்புகளை உருவாக்க வேண்டும். ஒரு வலுவான தொழில்முனைவோர் சூழலியல் அமைப்பு என்பது வெறும் கல்வி மட்டுமல்ல் அது கொள்கைகள், நிதி, கலாச்சாரம் மற்றும் ஆதரவு நிறுவனங்களின் ஒருங்கிணைந்த வலையமைப்பைப் பொறுத்தது (Isenbergஇ 2001). இந்த அமைப்புகளில் கல்விசார் ஆதரவு (பாடத்திட்டங்கள்), சமூக ஆதரவு (வழிகாட்டிகள் மற்றும் முன்னாள் மாணவர்கள்) மற்றும் நாட்டிற்குரிய ஆதரவு (சட்ட மற்றும் நிதி வழிகாட்டல்) ஆகியவை தொழில்முனைவோர் சுயதிறனனை மேம்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மேலும் மாணவர்கள் தமது திறன்களை நடைமுறையில் பயன்படுத்த, பல்கலைக்கழகங்கள் நலன்புரி மையங்கள், புத்தாக்கப் போட்டிகள், வர்த்தகத் திட்டப் போட்டிகள் மற்றும் மூலதன நிதி வழங்குதல் போன்ற தூண்டுதல்களை ஏற்பாடு செய்ய வேண்டும்.

விரிவுரையாளர்கள் வெறும் கல்வியாளர்களாக அல்லாமல், தொழில்முனைவோர் மனப்பான்மையைக் கற்பிக்கும் திறன் மற்றும் அனுபவத்துடன் கூடிய நடைமுறை வழிகாட்டிகளாக இருக்க வேண்டும். எனவே, விரிவுரையாளர்களை தொழில்முனைவோர் திறன்களில் மேம்படுத்துவது மிக முக்கியமானதாகும். அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் மூலம் வெளிப்புற தரச் சரிபார்ப்புகளை மேற்கொள்வது கற்பித்தல் முறைகளின் தரத்தை மேம்படுத்தும். அத்துடன் பல்கலைக்கழகங்கள் தமது பாடத்திட்டங்களை உலகளாவிய, தொழில்நுட்ப மற்றும் சந்தை மாற்றங்களுக்கு ஏற்பத் தயார்ப்படுத்தும் அதே வேளையில், அவற்றை உள்ளூர் சூழலுக்கும்

ஏற்ப மாற்றியமைக்க வேண்டும். மேலும், கல்வி நிறுவனங்கள், தொழில்துறை தேவைகளுடன் இணைந்திருப்பதன் மூலம் ஒரு வெளி நோக்கிய அணுகுமுறையைக் (Outward Looking Approach) கொண்டிருக்க வேண்டும். இது, தொழில்முனைவோர் வலையமைப்புக்களை உருவாக்கவும், உள்ளூர் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SME)இ துறைகளின் தொழில்நுட்பப் பிரச்சினைகளைத் தீர்க்க உதவவும் வழிவகுக்கும்.

அரச நிதிப் பற்றாக்குறையின் மத்தியில், உயர்கல்வி நிறுவனங்கள் நிதி ஆதாரங்களை பல்வகைப்படுத்த வேண்டியது அவசியம். அரசாங்கத்தால் வழங்கப்படும் வளங்களுக்கு மேலதிகமாக பல்கலைக்கழகங்கள் வணிக சமூகங்கள், தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் சர்வதேச தொழில்முனைவோர் மையங்களுடன் மூலோபாயப் பங்காளர் உறவுகளை ஏற்படுத்துவதன் மூலம் நிதி திரட்ட ஊக்குவிக்கப்பட வேண்டும். மேலும், கொள்கை வகுப்பாளர்கள் நிதி நிறுவனங்களை தொழில்முனைவோரின் தேவைகளுடன் நெருக்கமாகச் சீரமைக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். இது தொழில்முனைவோரின் நிதி அணுகலை எளிதாக்குவதுடன், வணிகத் தோல்விகளைக் குறைக்கவும் உதவும்.

தொழில்முனைவுக்கான உள்நோக்கம் (EI) மற்றும் சுய-திறன் (ESE) ஆகியவை உளவியல் காரணிகளுடன் நெருக்கமாகப் பிணைந்துள்ளன. எனவே, பாடத்திட்டங்களில் தொழில்முனைவின் உளவியல் அம்சங்களை உள்ளடக்குவதன் மூலம், மாணவர்களுக்கு இழப்பு குறித்த பயத்தைப் போக்குவதுடன், நேர்மறையான மனப்பான்மையை வளர்க்க வேண்டும். இதனுடன், சமூகத்தின் ஆதரவு இன்றியமையாதது. குடும்ப உறுப்பினர்கள், சமூகம் மற்றும் மதத் தலைவர்கள் மத்தியில் தொழில்முனைவு மேம்பாடு குறித்து கல்வி கற்பிக்கப்பட வேண்டும். இந்த நடவடிக்கையானது,

தொழில்முனைவோர் முயற்சிகளை ஆதரிக்கும் ஒரு சமூக-கலாச்சார சூழலை உருவாக்கி, பட்டதாரிகள் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய மனப்பான்மையை வளர்க்க உதவுகிறது.

முடிவுரை

இலங்கை பல்கலைக்கழக பட்டதாரிகளிடையே காணப்படும் அதிக வேலையின்மை வீதத்தை நிவர்த்தி செய்வதில், பல்கலைக்கழகப் பாடத்திட்டங்களின் மறுசீரமைப்பு ஒரு முக்கிய மூலோபாயத் தலையீடாக உள்ளது. தொழில்முனைவோர் கல்வித் திட்டங்கள், மாணவர்கள் மத்தியில் சுய-திறன், இயல்புகள் மற்றும் தொழில்முனைவோர் உள்நோக்கங்கள் மீது குறிப்பிடத்தக்க நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பது ஆய்வுகளின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்த நேர்மறையான தாக்கத்தை முழுமையாக உணர, கட்டமைப்பு ரீதியான மற்றும் கொள்கை ரீதியான தடைகளை நிவர்த்தி செய்ய வேண்டியது அவசியம். UGC-யின் இறுக்கமான நுழைவு நடைமுறைகள் மற்றும் விருப்பப் பாடங்களைத் தெரிவு செய்வதிலுள்ள நெகிழ்வுத்தன்மை இன்மை ஆகியவை மாணவர்களின் உள்ளார்ந்த தொழில்முனைவோர் விருப்பத்தைத் தூண்டுவதற்கான முயற்சிகளைத் தடுக்கின்றன. மேலும் விரிவுரையாளர் திறன் மேம்பாடு மற்றும் தொழில்துறை இணைப்புடன் கூடிய விரிவான சூழலியல் கட்டமைப்பை உருவாக்குவதே, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் புத்தாக்கமான, சுய-திறன் கொண்ட தொழில்முனைவோர் சமூகத்தை உருவாக்க உதவும் மூலோபாயத் திசையாகும்.

உசாத்துணைகள்

Bandura, A. (1997). *Self-efficacy: The exercise of control*. W. H. Freeman.

Fayolle, A. (2013). Personal views on the future of entrepreneurship education. *Entrepreneurship & Regional Development, 25*(7–8), 692–701. https://doi.org/10.1080/08985626.2013.821318

Gibb, A. A. (2007). Entrepreneurship: Unique solutions for unique environments. *International Journal of Entrepreneurship Education, 4*(1), 1–21.

Hill, F. M. (2001). Managing service quality in higher education: The role of the student as primary consumer. *Quality Assurance in Education, 9*(1), 10–21. https://doi.org/10.1108/09684880110381103

Isenberg, D. J. (2011). *The entrepreneurship ecosystem strategy as a new paradigm for economic policy* (Working Paper). Institute of International and European Affairs. https://www.innovationamerica.us/images/stories/2011/The-entrepreneurship-ecosystem-strategy-for-economic-growth-policy-20110620183915.pdf

Jayasundara, M., & Perera, N. (2024). University support systems and sustainable entrepreneurial intentions among undergraduates in Sri Lanka. *Journal of Entrepreneurship in Emerging Economies*. Advance online publication.

Katz, J. A., Aldrich, H. E., Welbourne, T. M., & Williams, P. M. (2003). Guest editor's comments: Special issue on human resource management and the SME. *Human Resource Management, 39*(1), 7–10.

Kuckertz, A., & Wagner, M. (2010). The influence of sustainability orientation on entrepreneurial intentions—Investigating the role of business experience. *Journal of Business Venturing, 25*(5), 524–539. https://doi.org/10.1016/j.jbusvent.2009.09.001

Neck, H. M., & Greene, P. G. (2011). Entrepreneurship education: Known worlds and new frontiers. *Journal of Small Business Management, 49*(1), 55–70. https://doi.org/10.1111/j.1540-627X.2010.00314.x

Rajapakse, A. (2016). Impact of entrepreneurship education on entrepreneurial intentions of undergraduates in Sri Lanka. *Sri Lankan Journal of Management Studies, 3*(2), 45–60.

Rasmussen, E., & Borch, O. J. (2010). University capabilities in facilitating entrepreneurship: A longitudinal study of spin-off ventures at mid-range universities. *Research Policy, 39*(5), 602–612. https://doi.org/10.1016/j.respol.2010.02.002

Shane, S., & Venkataraman, S. (2000). The promise of entrepreneurship as a field of research. *Academy of Management Review, 25*(1), 217–226. https://doi.org/10.5465/amr.2000.2791611

Sri Lanka Department of Census and Statistics. (2024). *Quarterly labour force survey – 2024 first quarter*. https://www.statistics.gov.lk

Weerasinghe, R., & Senavirathne, S. (2021). Determinants of entrepreneurial intention among graduates in Sri Lanka. *International Journal of Scientific and Research Publications, 11*(5), 120–128. https://doi.org/10.29322/IJSRP.11.05.2021.p11317